


ரயா
1778
140.
T4511

# தேனோலை

பதிப்பாசிரியர்:

## கொடுமுடி சண்முகப் பிரகதம்



**தேனோலை - 24**

**1980 - ஏப்பிரல்**

RAM
17780

# தேனோலை

காலாண்டிதழ்

இதழ் 22 ஏப்பிரல் 1980

தனி இதழ் விலை ரூ. 2

ஆண்டுக் கட்டணம் ரூ. 8

பெரும் பேராசிரியர்

## டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

## கொங்கு நாட்டில் கேட்டறிந்தவை

தொகுப்பதில் உதவி

பெ. அர்த்தநாரீசுவரன் M. A., M. Phil

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகப் பிரகாசம்

11.B, இரண்டாவது அவின்யு

இந்திரா நகர், சென்னை-600 020.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## இரண்டாவது மாநாடு

### மொரீசியஸ் 1980 ஆக. 4-8

உலகத்தின் பெரும்பாலான நாடுகளில் தமிழர்கள் வசிக்கின்றனர். பல்வேறு காரணங்கள் பற்றிக் கடல் கடந்து சென்றவர்கள், அங்கேயே தங்கி, அந்தந்த நாட்டின் குடிமக்களாக உழைத்து, உயர்வு பெற்றுள்ளனர். தமிழ் என்னும் பற்று அனைவரையும் ஒன்று சேர்க்கின்றது. அவ்வப்போது தாய்நாட்டுத் தமிழ் மக்களோடு கலந்து உறவாடித் தத்தம் பண்பாட்டை-தமிழ்ப் பண்பாட்டை நினைவுகூர்ந்து வாழ்க்கை அமைத்துக் கொள்ள விரும்புகின்றனர்.

அவர்களுக்குப் பெரிய மனக் குறை ஒன்றுண்டு. பிறநாட்டில் வாழும் தமிழர்கள் தாய்நாடு வந்து செல்வது போலத் தாய்நாட்டார், தாம் வசிக்கும் நாடுகளுக்கு அடிக்கடி வருவதில்லை என்பதுவே அதுவாகும். இந்த ஏக்கம் தீர ஏற்பாடு செய்யும் வகையில், 1974 ஆம் ஆண்டு, இலங்கை-யாழ்ப்பாணத்தில், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கூடிய அனைத்து நாட்டுத் தமிழர்களும் ஒரு புதிய அமைப்பினைக் காண விழைந்தனர்.

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர். சாலை. இளந்திரையனைத் தலைவராகக் கொண்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உருவாயிற்று. சோமலெ செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொறியாளர் கொடுமுடி - சண்முகன், ஈரோடு புலவர் இராசு மற்றும் பலர் அமைப்புக் குழுவில் இருந்தனர். பன்னாட்டுத் தமிழர்களும் பங்கு பெற்றனர். எல்லா நாடுகளிலும் அதன் கிளைகள் அமைந்துள்ளன.

மொரீசியஸ் நாட்டுக் கிளை- உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டை நடத்திட முன்வந்துள்ளது. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு நான்காம் தேதி முதல் எட்டாம் தேதி வரை நடைபெறும். மோகா நகரில் அமைந்துள்ள மகாத்மா காந்தி கழகத்தில் அந்நாட்டுத் தலைமை அமைச்சர் திரு. சிவசேகர் இராம்குலம் தொடங்கி வைப்பார்.

தமிழ் மக்களைத் திரண்டு வருமாறு மாநாட்டு அமைப்பாளர் தங்கனாமுத்து அழைக்கின்றார். அந்நாட்டில் இறங்கியது முதல் எல்லா வசதிகளையும் செய்திட ஆயத்தமாக உள்ளனர்.

ஏர் இந்தியா, ஏர்-மொரீசியஸ் விமானங்கள் வாரத்தில் இரண்டு நாள் செல்கின்றன. விடுமுறை காலக் கட்டணமாக 40 சதவீதத் தள்ளுபடி கிடைக்கினறன. போக வர ரூ 6600- ஆகும்.

ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்க :

செயலர், அடையாறு தமிழ்ச் சங்கம்,
11-B, இரண்டாவது அவின்யு,
இந்திரா நகர், சென்னை-600020

# முன்னுரை

தமிழ் இலக்கியங்களை எல்லாம் அந்தக் காலத்தில் கல்லிலே வெட்டி வைத்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்! ஆனால் பனை ஓலைகளில் எழுத மட்டுமே அந்நாளைய பொருளாதாரம் இடம் கொடுத்தது. ஓலைகளோ காலத்தால் அழிந்து விடக் கூடியவை. காலத்தை எதிர்த்து நின்றவைகளை நம்மவரே மகிழ்ச்சியோடு அழித்திருக்கின்றனர். பழைய ஓலைகளில் உள்ள செய்திகளைப் புதிய ஓலைகளில் எழுதிக் கொண்ட பின் பழைய ஓலைகளை ஆற்றில் விடும் வழக்கம் இருந்தது. காலப் போக்கில் புதிய ஓலைகள் எழுதாமலேயே, பழைய ஓலைகளை ஆடிப் பெருக்கின் போது தலையில் வைத்துக் கொண்டு முழுகினர். நமது இலக்கியச் செல்வங்கள் பலவற்றை நமது முன்னோர்களே அழித்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் தோன்றியவர் உ. வே. சாமிநாதர் ஆவர். உத்தமதானபுரத்தில் அந்தணர் குலம் விளங்க வந்த பெருந்தகை. தனது தொண்டால், உழைப்பால் தனது பெயரைத் தமிழோடு சேர்த்துக் கொண்ட தலைவர்.

அப்படி அவர் என்ன தான் செய்தார்? அவர் பிறந்த காலத்தில் காகிதத்தின் புழக்கம் பரவத் தொடங்கியிருந்தது. அச்சு எந்திரம் தனது பணிகளைத் தந்தது. அதைப் பயன்படுத்தி ஓலையிலிருந்தவற்றைக் காகிதத்தில் பிரதி செய்து அச்சிட்டு வழங்கும் முயற்சியினை மேற்கொண்டார். சொல்வது எளிது. காசு கொடுத்து புத்தகம் வாங்கிப் படிக்கிற பழக்கம் இல்லாத தமிழ் மக்களை வைத்துக் கொண்டு எந்த வேலையை உருப்படியாகச் செய்ய இயலும்! இருந்த போதிலும் ஓரளவு பணம் படைத்தவர்களிடம், புத்தகத்தின் விலையை முன் பணமாகப் பெற்று, அதைக் கொண்டு அச்சிட்டார். அல்லல்கள் பல நேர்ந்த போதும் அயராது உழைத்தார்.

எல்லாற்றிருக்கும் மேலாக அவர் அரும்பாடு பட்டது, இலக்கியங்களைத் தேடித் தொகுத்ததில் தான். படிப்பார் இன்மையால்

பழைய இலக்கியங்கள் அட்டாளிகளில் தூங்கின. இன்று நன்கு தெரிந்த இலக்கியங்கள் கூட, அன்று மெத்தப் படித்த மேதைகளுக்கும் தெரியாமலிருந்தது. அதனால் கிடைத்த ஓலைகளையெல்லாம் படித்து எழுதி வைத்துக் கொண்டார். அதன் நகல் ஓலை வேறு எங்காவது கிடைத்தால் அதனையும் படித்து பழைய பாடத்தைச் செப்பம் செய்து, பாடபேதங்களைக் குறித்துக் கொண்டார். அவரது அகன்ற தமிழ்ப் புலமை கொண்டு பழைய சொற்களுக்குப் பொருள் எழுதினார். அந்தச் சொல் வேறு எந்தெந்த இலக்கியங்களில் உள்ளதோ, அந்த இடங்களைச் சுட்டிக் காட்டினார். இவருடைய சாதனைகளில் இதனையே மிகவும் தலையாயதாகக் குறிப்பிட வேண்டும். வேறு எந்தப் பதிப்பிலுமே இத்தகைய அரிய பணி இல்லை எனச் சொல்லலாம்.

சுவடிகள் தேடி ஊர், ஊராக அலைந்துள்ளார். சென்ற இடத்திலெல்லாம், தனக்கு அரிய வருகின்ற செய்திகளை அங்கேயே துண்டு துண்டாகக் குறித்துக் கொண்டார். இச்செய்திகளை, இலக்கியப் பதிப்பின் போது ஆங்காங்கே பயன்படுத்திக் கொண்டார். அவர் கொங்கு நாட்டில் பல ஊர்களுக்குச் சென்றுள்ளார். திருச்செங்கோடு முத்துசாமி (கோனார்), வே. ரா. தெய்வசிகாமணி (கவுண்டர்) ஆகிய பெரும் புலவர்களைச் சந்தித்துள்ளார்.

பழைய கோட்டைப் பட்டக்காரர் வீட்டில் பலகாலம் தங்கி ஓலைச் சுவடிகளை ஆராய்ந்துள்ளார். அவர் கொங்கு நாட்டில் வலம் வந்த காலையில் எழுதிய குறிப்புகள், திருவான்மியூர் உ. வே. சாமிநாதய்யர் நூலகத்தில் இருந்தன. நூலகர் திரு. இராமன் அவர்களின் உதவியோடும், அனுமதியோடும் அக்குறிப்புகளில் சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம். குறிப்புகள் முழுவதும் காண விரும்புவோர் நூலகத்தை நாடுவதே நல்லது.

உத்தமதானபுரம் சாமிநாதர் பணி இவ்வளவு அகன்றதாக இருக்கக் காரணம் என்ன? ஆண்டவன் அவருக்கு அளித்த நீண்ட ஆயுள். 80 ஆண்டுகட்கு மேல் நல்ல உடல் நலத்தோடு தனது பதிப்புப் பணியில் ஈடுபட்டார். சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. சென்னையில் மாநிலக் கல்லூரியில் (கண்ணகி சிலையின் எதிரில்), அவருக்கு உருவச் சிலை அமைந்துள்ளது. இளைய தலைமுறையினர் தமிழ்த் தொண்டாற்ற போட்டி யுணர்வுடன் முன் வருதல் வேண்டும்.

—பதிப்பாளர்

பெரும் பேராசிரியர்

# டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

**கொங்கில் பயணம் செய்த போது எழுதி வைத்த குறிப்புகள் மாறுதல் ஏதுமின்றி, துண்டு துண்டாக அவை உள்ளவாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் மட்டும் தற்கால வடிவின. இக்குறிப்புகள் பற்றி விளக்கம் வேண்டுவோர் எழுதலாம்.**

**கொங்கு நாட்டு நூல்கள்:**

பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி, நன்னூலும் மயிலை நாதரும், நேமிநாதம், குருபக்தி, அகப்பொருள் விளக்கம். வச்சணந்தி மாலை.

சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் அடியார்க்கு நல்லார். □

**கொங்கு நாட்டு ஊர்கள் :**

பூந்துறை--இதிலடங்கியன பூந்துறை, வெள்ளோடு, நசையனூர், எழுமாத்தூர் என்ற நான்கு ஊர்களும் நான்கு வீடெனப் படும். ஒவ்வொரு வீட்டிற்கும் சுமார் 60 பட்டிகள் உள. இந்த நான்கு வீடுகளையும் சேர்ந்த 28 கிராமங்களுமுண்டு.

எழுமாற்றூர்—ஏழுமாற்றுள்ள பொன் கிடைத்த இடம் ஆதலின் இப் பெயர் பெற்றது என்பர்.

அரையனூர்—என்றது சிற்றரையும், பேரரையம் என இரண்டு வகை படும். கொங்கு நாடு தண்டகாரண்யம் என்று சங்கல்பத்தில் சொல்லப் படுகிறது. ராமன் கபந்தனை வென்ற இடம் கபந்தபாடி என்று வழங்குகிறது.

"பொன்னி நதி வானிநதி காஞ்சி நதி
சூழ்கின்ற பூந்துறை நாடே"

கபந்தனுடைய மண்டை சிதறின இடங்களில் சிறிய ஓடு விழுந்த இடம் சிற்றோடு, பெரிய ஓடு விழுந்த இடம் ஈரோடு, வெண்மையான ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்று சொல்லப் படுகின்றன என்பர் புலவர்கள்.

பூந்துறை காளியண்ணப் புலவர் என்பவர் நாடு, வீடுகளைப் பற்றிய தனிப்பாடல்கள் செய்து இருப்பதாகச் சொல்வர். இவர் திருவாவடுதுறையில் படித்து வந்தவர்.

பவானி:—பஞ்சகிரி மத்தியில் உள்ளது. பஞ்சகிரிகளாவன— வடக்கில் வேதகிரி, கிழக்கே சங்க(ல)கிரி, நாககிரி, பத்மகிரி, மங்கலகிரி. பவானி நதியும் காவேரி நதியும் கூடும் இடம் பவானிக் கூடல்.

கொங்கு மண்டலம் 24 நாடுகளை உடையது.

1. பூந்துறை நாடு
2. காங்கேய நாடு
3. தென்கரை நாடு
4. வடகரை நாடு
5. ஒடுவங்க நாடு
6. அரைய நாடு

"நாலாறு நாட்டினு மேலான பூந்துறை". 24 நாடுகளையும் கூறும் கவியும் உண்டு.

பட்டாலி—சிவன்மலைக்கருகில் ஓர் ஊர்.

பரஞ்சை—பரஞ்சேர் வழி.

கண்ணை—கண்ணபுரம்.

காறை—காறையூர் (நந்தக் காரையூர்). ▢

காங்கய நாட்டுக் கிராமத்திலுள்ள சிவன் மூர்த்திகளின பெயர் விபரம்,

சிங்கநகர் வாழ்வுற்றஅகிலாண்ட வல்லியும்
செயல் வள்ளி மநகரில்வும் தேவியாம் பெரியநாயகி எழில் கௌரிமால்
தென் கோடையூரில் வாழும் பங்கயச் செல்வியும்
பட்டாலிநகர்தனில் பரிவு செறி நல்ல மங்கை பண்பான கீரனூர்

அகிலாண்டவல்லியும் பார்ப்பதி பெரியதாயும்
பரஞ்சை நகர் மருவார் குழலி
எழில் காறை நல்ல மங்கை
இனிய மருதுறை மேவும் பச்சை மரகதவல்லி
எழில் தாராநகரில் மேவும் கொங்கிலுயர்மால் பெரியநாயகி
கூர் கண்ணையில் வித்தகச் செல்வியும்
குலவு தென் வெள்ளைக்கல் தெய்வநாயகியம்மன்
குவலயந்தனிற் காக்கவே.

பூந்துறை நாட்டில் 32 ஊர்கள். இதில் 4 சமஸ்தானம். இவை 4 வீடென்று கூறப்படும்.

ஆரவனஞ் சேர மணியாரமணி மேடையெனும்
ஆரவனஞ் சூழ்காரை யானூரே-ஆரவனத்
தோதிமத்தானங் தத்தானோதிமத்தானந்தத்தா
னோதிமத்தானங் தத்தானூர்.

24 நாடுகளுக்கும் 24 பாடல்கள் உண்டு.

கம்பர் கூறிய வாழ்த்துக்கவி 16. பால் சாப்பிடும் பொழுது புலவர் சொல்லுதல், எசமான் பெயர்தான் புலவர் பெயர். குருக்கள் பெயருமப்படியே-நல்லதம்பி. நல்ல சேனாபதி பூந்துறை நாட்டுப் பட்டக்காரர்கள் பெயர்கள் வாரணவாசி, அவிநாசி குடிகள் வீட்டுக். கல்யாணத்தில் மணமகன் உண்கலத்திற் புலவர் பால் பழம் உண்பர். □

பட்டக்காரர்கள்—4

1. காடையூர்ப் பட்டக்காரர்-இம்முடி... காங்கேயர், காங்கேய நாடு.
2. பழைய கோட்டை பட்டக்காரர்-காரையூர்ச் சர்க்கரை மன்றாடியார்-காங்கேய நாடு (பயிறகுலம்)
3. சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர்-வேணாவுடையார் (கொற்றை நகர்) - தென்கரை நாடு (பெரியகுலம்)
4. காங்கேயம் புதூர் பட்டக்காரர்-பல்லவராயர்-காங்கேய நாடு (செங்கண்ணகுலம்)

2. ஆலாலசுந்தர பண்டிதர் குருக்கள் பாளையம். மோக்ஷாகுரு. சிதம்பரதீக்ஷிதர்-தீக்ஷாகுரு.

3. பரமசிவ பண்டிதர்.

பழைய கோட்டைத் தர்மங்கள்-குழந்தைப்பால், பசித்தோர்க் கன்னம்,தண்ணீர்ப்பந்தல், கோ ஸம்ரக்ஷணை. பசுக்கள் கிழமானாலும் விற்பதில்லை .

ஊஞ்சலூர்க்குப் பக்கத்தில் நாட்டாற்றீச்சுவரர்கோயில் ஒன்று இருக்கிறது. காவிரிக்கு மத்தியில்.

குருடிமலை—குருவடி மலை. பேரூர்க்கருகில் உள்ளது.

ஸ்ரீமத் கொங்கு இருபத்து நான்கு நாட்டிற்கும் நற்குடி நாற்பந்தெண்ணாயிரம் கோத்திரத்திற்கும் சாதி மத விசாரணைக் கர்த்தாவாகிய பழைய கோட்டை வட்டம் காரையானூர் நல்லதம்பிச் சர்க்கரை உமத்தக்காமிண்ட மன்றாடியார் பரம்பரையாகப் பசுக்களைக் காப்பாற்றுபவர்கள். நல்லோலை, புறம்போலை இரண்டுங் கொடுக்க இவர்களுக்கு உரிமை உண்டு. கொற்றவேல், நல்ல சேனாபதி, நல்ல தம்பி மூத்தவர்க்கே அரசுரிமை.

2. புதூர்ப்பட்டம்—மும்முடிப்பட்டம்- சிதம்பரப்பல்லவராயர், கணபதிப்பல்லவராயர்

3. காடையூர்ப்பட்டம்

அமராவதி காங்கேய மன்றாடியார். இம்முடிக்குமார காங்கேய மன்றாடியார்-சகலப்பாடிகள்.

இவை மூன்றும் காங்கேய நாட்டிலுள்ளன. பார்ப்பவர்களை மதிப்பவர்.

கணக்குப் பிள்ளைகள் நல்லாண்டாரை வைத்தும் பூசித்து வருவார்கள். நல்லாண்டார்-குலதெய்வம்.
வரணாசிரம தருமத்தைக் கவனிப்பவர்கள். தென் கரைசை நாடு

**பழையகோட்டை பசுக்களின் பெயர்**

1. மயிலை — கருமை கலந்த வெண்மை
2. சிவலை — சிவப்பு (செங்கல் நிறம்)
3. காரி — கருப்பு
4. வெள்ளை — விபூதி (சாம்பல்)
5. அழுக்கு மயிலை — கருமை கலந்த, வெண்மையில் கொஞ்சம் மங்கல்
6. பில்லை — சிவப்பு (மங்கல்)
7. கபிலை — பில்லைக்கும் மங்கல்
8. சந்தனக்கபிலை — வெண் சந்தனம்
9. கரம்பை — கருமை 3 மடங்கு, வெண்மை 1 மடங்கு,
10. மறையன் — புள்ளி உள்ளது சிகப்பு கருப்பு கலந்தது.
11. காராம்பசு — வாலும் முலையும் கருப்பாக இருக்கும். மற்ற பாகம் எந்த நிறமாயினும் சரி.

**ஆடுகள்**

செம்மறியாடு — சிகப்பு
வெள்ளாடு — கருமை நிறம்
குரும்பையாடு — நீண்ட மயிர். கம்பளி நெய்வதற்கு உதவும்
பிள்ளையாடு — வெள்ளை

1. பழையகோட்டை பட்டக்காரர் கிராமங்கள்... 6

   மருதுறை, பூத்தூர், பழையகோட்டை, பார்ப்பனியில் பாதி (தோடை பிரிவு) தோடை-ஒரு குலம்

2. புத்தூர்ப்பட்டக்காரர் : காங்கேயம், கண்ணபுரம், வெள்ளக் கோயில், உத்தமபாளையம்.

3. காடையூர் : காடையூர், கீரனூர், பட்டாலியூர், பரஞ்சேர் வழி, புலவன் வலசு. இது விஜயமங்கலத்தில் இறங்கிச் செல்லவேண்டும். ☐

**சிவகிரி :** இது புலவர்கள் இருக்கும். கொடுமுடியைச் சார்ந்த ஊஞ்சலூர் ஸ்டேஷனில் இருந்தும் செல்லலாம், 7 மைல் தத்தமங் கலம் சிற்றூர் - கொச்சி இராஜ்ஜியம் பூந்துறைக்கடுத்த திருஞான சம்பந்தபுரம் -புலவன்வலசு - புலவன் பாளையம்.

பழையகோட்டை நந்தக்காடையூர் (காரையூர்)

ஐயப்பிரதானேசுவரர் — பாலஸௌந்தரியவல்லி

பெருமாள் — வரதராஜர்

பூமி — லட்சுமி

சுக்கிரீவன் கோயில் - பெரிய பாளையம் (திருப்பூருக்குச் சமீபம்) குசவிபாளையம் ஸ்டேஷன். □

கொங்கு நாட்டில் உள்ள ஊர்கள் 32 அவற்றுள் விஜயமங்கலம் ஒன்று. இது மங்கை எனவும் வழங்கும். நிரம்பையூர் ஒன்று.

முகுந்தை-குரங்குத்தளி (கொங்குமண்டல சதகம் பா-95)
காடையூர்க் காங்கேயன் ( „ „ பா-75)
மொக்கனியீசர் ( „ „ பா-24) □

**கொங்கு நாட்டின் பெயர்க் காரணம்.**

இது மலை நாட்டோடு சேர்ந்தது.

ஓரி—மேல் கொங்கு நாடு.

கொங்கர், கவுண்டர்.

சேரன்—சேலம்

சேர்வைராயன் மலை எல்லை.

சேரனாட்சியில் வடக்கே மைசூர் பக்கம் வரையில், கிழக்காக சேர்வராயன் மலை வரையில், தெற்கில் பாண்டிய நாடு வரையில் கொங்கு நாடு இருந்தது.

கொங்கானி—கொங்கானிவர்மனிலிருந்து வந்தது. காவேரியின் மூலத்திலிருந்து (குடகு) வந்தவன் இவன். பின்பு சேரனாட்டொடு சேர்ந்திருந்தது. கொங்கர் கொங்கானிவன்மன் வீரர்கள் வேடர்களே. இந்த நாட்டிற்குத் தென் கிழக்கில் உள்ளது கொங்குக் கரை எல்லை. இக்கரை வடமேற்கில் கொல்லி மலை வரையிலும், தென் மேற்கில் பழனி வரையிலும் இருக்கின்றது.

முடிமன்னருடைய மூன்று ராஜியத்தின் எல்லை குழித்தலைத் தாலூகாவிலுள்ள கருவூரின் சில மைல் தூரத்தில் மத்தியக் கரை

என்ற இடத்திற் சேருகிறது. இதுதான் சேரநாட்டிற்கும் எல்லையாக இருக்கலாம். சேரநாட்டின் தென் எல்லை, செங்கோடு அல்லது தென் காசி. பழனி சேர நாட்டின் வடமேற்கு மூலையில் உள்ளது. கி.பி. 9 ஆவது நூற்றாண்டு கம்பர் கற்றுச் சொல்லிகள் இங்கே உண்டு. கம்பர் புலவர்களுக்குப் பாடஞ் சொன்னதாகக் கதை உண்டு.

வடக்குத் தலை மலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்கு வெள்ளிப் பொருட் புக்குன்று.
கிழக்குக் குழித்தண்டலைக் குழு காவிரி நன்னாடா
குழித்தண்டலை அளவுங் கொங்கு.

1. தலைமலை—மைசூருக்கும் சத்திய மங்கலத்துக்கும் இடையே உள்ள தொடர் மலை.

2. பழனி. □

கர்னாடகர் கொங்கை ஆண்டனர். இத்தேயம் 24 நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. 24 இல் மிகுதியானவை கோயம்புத்தூரிலும் சில செங்கோட்டை சூழ்ந்து சேலம் ஜில்லாவிலும், குழித்தலைக்கு அருகிலும் பழனித் தாலூகாவிலும் இருந்தன. கொங்கு மிகப் பெரிய நாடு. தொண்டை நாடு போல.

இதன் இராசதானி : முதலாவது கருவூராகிய கந்தபுரம் அல்லது தாராபுரம். சோழர்கள் இதனை வென்றனர். வென்று கி. பி. 878 முதல் தலைக்காடு உள்பட கன்னடத்தையும் கொங்கையும் 200 வருடம் ஆண்டார்கள். 11ஆம் நூற்றாண்டில் இரண்டும் பிரிந்து விட்டன. 1080க்குள் வல்லாளரிடம் உரித்தாயிற்று. விஜயாதித்தனுக்குக் கன்னடமும், கொங்கு வல்லாளனுக்கும் சேர்ந்தன.

தலைக் காட்டில் இருந்த ஹொசள குலத்தவனாகிய வெல்லாளன் 12ஆம் நூற்றாண்டில் கொங்கை வயப்படுத்திக் கொண்டு கோவத்தூர் (கோயம்புத்தூர்) வயப்படுத்திக் கொண்டு ஒரு ராச்சியத்தை ஸ்தாபித்தான். இந்த நாட்டுக்குத் தெற்கு எல்லைகள் கொங்கு, சேலம் ஆனைமலை, 1283 இல் கொங்கர் தம்முட் கலாய்த்து பிறரால் ஜயிக்கப் பட்டார்கள். இதனை முறையே விசயநகரத்தாரும் மைசூர் வீரப்ப நாயகரும், மதுரை நாயக்கரும் சயித்து ஆண்டார்கள். பிறகு மைசூராரும் வெள்ளாளரும் ஜயித்து ஆண்டார்கள். கோயம்புத்தூர் கோட்டை மைசூரரசால் இடியுற்றது. மேற்படி இடம் கோட்டை மேடு என்று சொல்லப்படும். அதில் 2 பழங்கோயில்

உள்ளன. அந்தத் தெய்வப் பெயர் கோனியம்மன் கோயில். திப்பு சுல்தான் கட்டிய கோனியின் பக்கத்தில் உள்ளது. மனநோவுக்குரிய ஒரு குணமுள்ள தோட்டம் ராஜவீதியின் மேற்குக் கோடியில் உள்ளது. தம் வேலைக்காரராகிய கோவிந்தராவுக்கு அவர் கொடுத்தனர். மயிலேறும் பாளையம் என்றும் ஜாகீயரையும் சில ஊர்களையும் கொடுத்தனர். மேற்படி ராவ் கட்டிய ஹனுமார் கோயிலுக்குப் பின் மேற்படி குளம் உள்ளது. அந்தஎள வீடு ஜாகீர்தார் வீடு என்றும் வழங்கும். □

சாதி :

**வேளாளர்:** கொங்கு நாட்டு வேளாளர் என்ற கவுண்டர்கள். தங்களுக்குக் கம்பர் கலிவெண்பாவாகிய மங்கல வாழ்த்து என்ற செய்யுளைச் செய்ததாகக் கூறுகிறார்கள்.

**மருத்துவர்கள் :** (நாவிதர்கள்) வைத்தியத்தில் வல்லவர்கள் என்பதை 'நாவித வைத்பம், வள்ளுவ சோதிடம்' என்ற பழமொழியால் அறிக. ஒவ்வொரு நாட்டிலும் புலவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்யாண வீடுகளில் மிராசு உண்டு. அவர்கள் கார் காத்த வேளாளர்கள். நாட்டுப் பாடல்களைப் பாடுவார்கள்.

குருமார்கள் (கொங்கு நாடு)

காங்கேயர் தன்னிறுத்தம் பட்டாவணிம் பண்டிதர்
கருணை வாழ் பெரியசாமி
காடைவரு சைவப் புரந்தரர்
பட்டாலி கனக சிவகிரிப் பண்டிதர்
ஓங்கு புகழ் கீரனூர்க் கொடுமுடிக்
குருராயர் உற்ற பார்ப் பணியில் மேவும்
வேதாந்த பண்டித குருபரஞ் செம்
பதியில் உயர் சத்திகுரு தேசிகன்
தேங்கு புகழ்காரைச் சிவஞான பண்டிதர்
தென் மருதுறைச் சுந்தரர்
தென்முத்து மேவுகுல சேகர என்னும் பண்டிதர்
தேவர் புகழ் கண்ணை நகர் வாழ்
ஆன்பொருநை முகிலினம் கனகசபாபதி பண்டிதர்
அருள் வளரும் வெள்ளை கோயில்
அதிபனுடன் சந்திரசேகருடன் பன்னிருவர்
அணி மகுட குருராயரே.

## கொங்கு நாட்டுச் சாதிவகைகள்

**குறும்பர் வகை** இவர் மலை நாட்டில் வாசம் செய்தவர்கள்.

1. புல்வரி கட்டுபவர் (முதலிமார்கள் கட்டுவதற்குப் புல்வரி என்னும் கருவியை அமைப்பவர்.)

2. பன்றியாண்டிக் குறும்பர்.

3. ஜோசிக் குறும்பர்—பாம்பாட்டிகள்.

4. கழைமரக் குறும்பர்—கழைக் கூத்தாடிகள். இவர் தெலுங்கு கன்னடம், துளு, மகாராஷ்டிரம் பேசுபவர்கள்.

குறும்பர் யாவரும் கட்டுப் பெண் கட்டுவார்கள்?

கரும்பாசி ஐந்து தாலியாக உடையார் குறும்பர்.

**கோடங்கிக்காரர் வகை**

1. ஜாமக்கோடங்கி—மாயான பூசை.

2. குடுகுடுப்பைக் கோடங்கி

3. மாரிக் கூடக் கோடங்கி—மாரியம்மன் பெட்டி வைத்து ஆடுபவர்கள்.

4. குருவிக் கோடங்கி—குருவி பிடிப்பவர்.

5. ஏக்கிலிக் கோடங்கி—உயர்ந்த வகுப்பினர்.

1—4. இவ்வகையார் மறுபுருஷர் கொள்பவர்.

கோடங்கியர் தெலுங்கு, கன்னடம் பேசுபவர்கள்.

**பறையர்கள் :** (எட்டு வகையினர்.)

1. கறுப்பு வளைப் பறையர்—இவர் பெண்கள் கறுப்பு வளையையே அணிபவர்.

2. பச்சை வளைப் பறையர்

3. சங்கிடும் பறையர்

4. தவளை தின்னிப் பறையர்

5. மொட்டைப் பறையர்.

6. கட்டைப் பறையர்

7. சோழியப் பறையர்

8. தங்கலாம் பறையர் = மட்ட ஜாதி. குறவர்களுக்கும் பறையர்களுக்கும் பிறந்தவர்கள்.

**கொங்குக் குயவர்:** தமிழ் பேசுவோர்.

**வடுகக் குயவர்:** தெலுங்கு பேசுவோர். கட்டுப் பெண் கட்டு பவர்கள்.

**குறவர்:** கட்டுப் பெண் கட்டுபவர்.

**சக்கிலி:** வடுகச் சக்கிலி, கன்னடச் சக்கிலி.

**நாவிதர் :** (கொங்கு) சாயபுகளுக்குப் பண்ணமாட்டார். மங்கல வாழ்த்துச் சொல்பவர்கள்.

**வேட்டுவ நாவிதர் :** மட்டம், கட்டுப் பெண் கட்டுபவர்கள்.

**வண்ணான் :** தமிழ் வண்ணான், வடுக வண்ணான் கட்டுப்பெண் ஜாதி

**ஒக்கிலியர் :** கன்னடம் பேசுவர்கள்'

**பண்டாரம் :**

1 ஓகைச்சாண்டி, உவச்சாண்டி
2. கோவனாண்டி.
3. ஜங்கமாண்டி - லிங்கங்கட்டி
4. மணியாண்டி - மணியைக் கழுத்தில் கட்டிக் கொண்டு அடிப் பவர்கள்.

புலவர் - சேர வேளாளர் என்பவர். □

**கொங்கு நாட்டில் வழங்கும் கோத்திரங்கள்**

அந்துல கோத்திரம்
காடைகுலம்
பண்ணைகுலம்
சாத்தகுலம்
கீரன்குலம்
ஆதிகுலம்
அதிவிலயன்
தேவேந்திரகுலம்

**கோப்பண்ணபட்டம் :** கோயம்பத்தூர் ஜில்லாவில் பொள்ளாச்சி தாலூக்காவில் புரய பாளையத்தார்

வேளாள வீட்டுக் கல்யாணங்களில் மங்கல வாழ்த்துச் சொல்லு பவன் நாவிதன். அதனால் மங்கல வாடு என்பது பொருத்தமாக இருக்கிறது. இந்த மங்கல வாழ்த்து பாடல் கம்பர் சொல்லியதாகச் சொல்லுகிறார்கள் ஒவ்வொரு நாட்டுக்கு ஒரு புலவர். மிராசு கல்யாணங்களுக்கு இவர்களுக்கு பத்துப் பணம் சம்பாவனை. பணம் என்பது 2 அணா 4 அணா. வாகிலி கெட்டவன் கலியாணம் பண்ணினாலும் பால பாரதிக்குப் பத்துப்பணம். பவானி அனந்த பாரதிக்கு 5 பணம், மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண் வீட்டுக்குப் போகும் பொழுது 18 வாத்தியம் வாசிப்பது வழக்கம்.வாத்திய-வகை பம்பை, ஜண்டை, லவண்டை முதலியன. புலவர்களும் போவார்கள் எதிர் கொண்டு வரும் பெண் வீட்டுக்காரர்களுக்கும் 18 வாத்தியம் உண்டு. விவாகம் நடத்தும் பொழுது தாந்திரிகங்களைத் தெரிந்து நடத்துபவன் பெயர் அருமைக்காரன். எல்லாந் தாந்திரமாக நடக்கும் புரோகிதன் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. அருமைக்காரன் இன்றியமையாதவன், மாப்பிள்ளை கையையும் மைத்துனர் கையையும் சேர்த்தற்குக் கைக் கோர்வை என்று பெயர். இதில் அரிசியைப் போட்டு நாவிதன் சொல்லும்.

நல்ல கணபதி நாம் காலமே தொழுதால்
அல்லல் வினையெல்லாம் அகலுமே-
சொல்லரிய தும்பிக்கை யானைத் தொழுதால் வினை தீரும்
நம்பிக்கை யுண்டே நமக்கு".

மேல்கவி வெண்பா முடிவில் கம்பர் சொன்ன வாக்கியம் என்று வருகிறது. மாப்பிளை குதிரையின் மேற் செல்ல வேண்டும், குடை எடுபிடிகள் சாமரை கோயில் போல உண்டு; மாப்பிளைக்குச் சீராகக் கொடுக்கும் செருப்புக்குச் "சமாளி"என்று பெயர். செருப்பை மாட்டிக் கொள்ளுவதற்குத் "தொடல்" என்று சொல்லுவது.

பரியம்—பரிசம். மாப்பிளை வீட்டுக்காரன் பெண் வீட்டுக் காரனுக்குக் கொடுப்பது,

பரியம் ரூ 42½, ரூ 52½

மாத்து-கலியாணத்திற்கு வண்ணானால் விரிக்கப்படும் வஸ்திரத் திற்குப் பெயர்.

நோட்டக்காரன் - பணம் செல்லுமா என்று பார்ப்பவன்;கம்மாள ஜாதி.
மிராசு-ஊர்ப்பணம்,

பணம் ஒன்றே விவகாரம்.

**செங்குந்த வேளாளர்கள்**

1. முப்பாட்டுக்காரர் (முதற்பாட்டுக்காரர்)

**முத்தரசர்.**

சொற்றவராதோர் கனிவுளத்தோர்
துகளற நூற்
கற்றவர் தமக்குதவுத னோம் பெனக்
கொண்டவராஜ
சொற்றமிகு முத்தரசர்கள் வாழ்வு
செழித்தரசு
மற்றபுகழும் பெற்றாண்டதுவுங்
கொங்கு மண்டலமே

நார்த்தாலைச் சாஸனம்
செந்தலைச் சாதனம்
வலையர் முத்தரசர் எனப்படுவார் கொங்கில்
தோப்பண மன்றாடி (கொங்கு மண்டல சதகம்–59)
விஜயமங்கலம் உலகுடையான் ( ,, - 82)
திருமுருகன் பூண்டி ( ,, - 97)
அவிநிதன் ( ,, - 100)
ஐங்குறுநூறு (முதல் பத்து)

**தூத்துக்குடி செங்குந்தர்**

1. வாணியர்
2. இலைவாணியர் — மூப்பனார்
(கொடிக்காற்கரர்)
3. பாளர் — தையற்காரர் (சிலம்பம் முதலியன)
4. அளவர் — வீடு கட்டல், உப்பு அளத்தல் (பண்ணையார்)
5. பரதர் — (பரதநாட்டியம், மாப்பிளைமார்)
6. முக்குவர் (வலையர்)
7. ஈழவர் (நெய்தல், சாரயங் காச்சுதல்)
8. மறவர் (கொத்தாளி, கொண்டயங்காடு, வன்னிபுரத்தர்)
9. இடையர் — கோவைகன் (நம்பி, இடையர்)
10 தாதன் — சாத்தாதவர்கள்

**ஸ்தலங்கள்**

கொங்கு வைகாவூர் நாடு-கொங்கு நாட்டு உள் நாடுகளில் ஒன்று.

(திருப்புகழ்)

பழனி — கொங்கு வைகாவூர் நாட்டிலுள்ள தலம்
உலிதாயம் - சுக்கிரிவனும் அனுமானும் பூசித்த தலம்
தாராபுரம் - நாதர் பெயர் அகஸ்தீஸ்வரர்
நாயகி பெயர் :

தாராபுரம் கல்யாணராமசாமி கோயில்
கொழிஞ்சிவாடி - சொக்கநாதஸ்வாமி

காங்கேய நாட்டு 12 ஸ்தலங்கள்

1, காங்கேயம் காரைக்கோன் அகத்தீசர்
2. வள்ளிநகர் (வள்ளியரைச்சல் மாந்தீசர்)
3- காடையூர் - காடையூரப்பர் அப்பலிங்கேசுவரர்
4. பால்வெண்ண நாதர் (பட்டாலியூர்)
பட்டாலிக் கிராமத்தில் சிவன்மலை இருக்கிறது.
5. கீரனூர் — ஆதீசர்
6. பார்ப்பனி (ஓரூர்)— பச்சோடலிங்கீசர்
7. பரஞ்சேர்வழி (பரஞ்சை)— நட்டூநலிங்கீசர் (நடு + ஊறல்)
8. காரைமாநகர் — சயங்கொண்டநாதர்
9 மருதுறை — பட்டீசர்
10. முத்தூர் — குலோத்துங்க சோளீச்வரர்
11. கண்ணபுரம் (கண்ணை) — மாந்தீசுவரர்
12. வெள்ளைக் கோவில் — சோளீச்சுரர்
மதுரைக்கு வடக்கே சோமகிரி
சிலவனநாதர் — நாட்டுராயன் கோயில்
பிரமேயம் — பிரம்மா யாகம் செய்த இடம். அதற்குரிய சின்னங் இருக்கின்றன.
நாடுகாண் மன்றம்
நாலுகால் மன்றம் — நாடு காணிமேடு
மாந்தபுரம்
பிள்ளை வேணாடன், நடன கல்யாணி

தென்கரைநாடு

1. கொற்றை நகர் — அப்பிராயர்
2, மூலனூர் — சோளீசுவரர்
8. குறிச்சி — அழகீசுவரர்
4. முளையான் பூண்டி — மாணிக்கமூர்த்தி
5, எதிரனூர் (மாம்பாடி) — மாந்திலிங்கம்

6. பிரமேயம் — வலஞ்சுழி நாதர்
7. நீலம்பூர் — ஏணீசுவரர்
8 கோமன்கை (கொளிஞ்சிவாடி) — கோவீசுவரர்
9. வீராட்சி — காசிலிங்கர்
10. துவரம்பாடி — மாணிக்கவாசகர்
11, ஊதியூர் — கைலாச நாதர்

அப்பிரமேயம் — பயிறு மிளகானது.

சேவூர் — வாலீசுவரர்

பொன்னூதி மாமலை — முருகன் உத்தண்ட வேலாயுதர். கீழே சிவாலயம் உள்ளது. சுவாமி பெயர் - கைலாசநாதர். அம்பிகை பெரியநாயகி. கானாச்சுனை, கருநொச்சி, வெண்சாமரை, கொங்கணச்சித்தர் கோயிலும் குகையும் இருக்கின்றன.

காவை — காவனூர்

காவை வடமலையப்பன் — ஸ்ரீமுஷ்ணத்துக்கு வடக்கே 3 மைல் தூரம்

காலவ தீர்த்தம் — நவபாஷாணத்தில் உள்ள சக்ரதீர்த்தத்தினுள் அடங்கியது.

முக்குறுணி அவல் பொட்டல் — இது உப்பூர்ப் பக்கம் உள்ளது

வேதாளதீர்த்தம் — வெற்றிலை மண்டபத்தில் இருக்கிறது.

பாபவிநாசதீர்த்தம் — உச்சிப்புளிக்கும் மண்டபத்துக்கும் மத்தியில் உள்ளது.

சீதாகுண்டம் — தங்கச்சி மடத்திற்குச் சமீபம்.

மங்கலதீர்த்தம் — தங்கச்சி மடத்திற்கும் ஏகாந்தராமன் கோயிலுக்கும் மத்தியில்

அமுதவாவி — ஏகாந்தராமன் கோயிலுக்குள் கிணறு வடிவம்.

# சில பாடல்கள்

1. தென்பழநி வேன்முருகர் சேவடியைப் போற்றி செய்தேன்
அம்புவியிற் சமயமாலை யான்பாட
சம்புசதா சிவனார் தானின்ற தொந்தி வயிற்
றும்பிமுகத் தைங்கரன் நன்றுணையடியே காப்பரமே.

2. வையாபுரி நாடு (இது சமயமென்னு முதலால் இப்பெயர் பெற்றது).

3. ஆறாறு நாறூரான் அஷ்டமங்கலம்
அம்பையாகிப் போது படைத்தான்
(21) பட்டம் புலவர்கள்.
பாடவறியேன் பழநிக்குப் போவதற்கு
நாடறியப் பத்துப் பொன் நல்கென்றால்—தேடி வரும்
நாதனருளாற் கொடுத்த நல்லதப்பிச் சர்க்கரைக்கு
காதல் பெறுங் கீர்த்திக் கவி.

— (நற்காரையூர் நகரில்)

கலியுக சகாத்தமது எண்ணூற்றேழின் மேற்
கரை கண்ட சோழனாளில்

காவேரி மாநகர் மதுக்கரைச் சோழன்முன்
கம்பருக் கடிமையாகி

நிலையான நற்குடிகள் நாற்பத் தெண்ணாயிரம்
நேருள கலன் கொடுத்து

நெடிய தொரு வணிசேகர் ஐந்நூறு கோத்திரம்
நேராக மாற்றளித்து

வலிமையது பேசிய அகளங்கச் சோழன்முன்
மதுக்கரையில் வந்து கூடி

மதுரைச் சங்கந்தனைச் சோழன் கொடுத்தபின்
மாடையென்றது வாங்கியே

சிலசாஸனத்துடன் சூரிய குலப்பாரம்
சீர்பெற அரைச் கழஞ்சசைத்

தென்றிசைச் காராளர் வணிகேசர் உள்
ளளவும் செயம் பெற நடத்தினர்களே.

**கரியான் சர்க்கரை உத்தமக் காமிண்டன் பட்டம் பெற்ற நாள்**

கலியிரு நூற்றில் விசையாண்டு மீனத்திற் கார்புரந்த
மலிபுகழான் கரியான் செயமாது வலிமையினால்
புலித்துவச னுத்தமக்காச சோழனேவிய பூதலவி
தொலைவு செய்தேரிபு சாதனைநாள் முடிசூடினனே.

கலியுக சகாத்தம் 200க்கு மேல் செல்லா நின்ற விஜய வருஷம் பங்குனி மீ" குருவாரம் பூர்வ பட்சத்துப் பஞ்சமியும் மிருக கீரீட நட்சத்திரம் சுக்ர நாம யோகம் கவலவாகரணமும் கூடிய சுபதினத்தில் கரியான் சர்க்கரைக்கு பட்டாபிஷேகம்.

தோற்றுங் கலியுக மூவாயிரத்துத் தொளாயிரத்தாற்
றேற்றிடுங் கீலகந்தையென் குருதசமித் திதியில்
போற்று நலச் சர்க்கரை வச்சிரவாகுவைப் போர் தடிந்து
மாற்றிப் புகழ்க் கிருஷ்ணராயர் தங்கையினில் வாங்கினளே.

[பழைய கோட்டைப் பட்டாக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களுடைய தந்தையார் பேரில் பூந்துறை அவிநாசி லிங்கப் புலவர் பாடியது வருமாறு.]

பட்டஞ் சுமந்த முடிமன்னர் சேனை பயந்து கடைப்
பட்டஞ் சுவர்ணப் பரியுடையோய் நம்பரனண வழிப்
பட்டஞ் சுகம் பெரும் சேனாபதித் துரைப் பாண்டியனே
பட்டஞ் சுசோமனளிப் பாய நின் கீர்த்தி பரவுதற்கே.

**கொங்கு நாட்டுத் திருவாசற் சிறப்பு.**

நம்பினோர்தமைக் காத்திடும் வாசலே
நாதகீதம் முழங்கிடும் வாசலே
சொம்பதாகக் கொடை தரும் வாசலே
துய்ய பூமிதன் பாலகர் வாசலே
செம்பொன் மேருவிக்கிணையான வாசலே
சித்ரமேழி சிறந்திடு வாசலே
கம்பர் பாடல் மிகக் கொண்ட வாசலே
கங்கை பாலகர் கல்யாண வாசலே.

## வெண்பா

பொய்கை அருளா ளரைப் புணைந்து புத்தூரும்
ஐயமறக் கொண்டவர்க்கூ ராக்கினான்—செய்யமலர்
மாதுயரா நின்ற மலை நாட்டு வாழ்வணிகன்
ஆதியிரா மன்கேர ளன்.

மலை மண்டலத்து ஆப ஈனார் சிறை இராமன் கேரளன்.

## பூந்துறை

மாகஞ் சிறந் திரட்டு மார்த்தாண்டன் பாற்கவரும்
பூகஞ் சிறந் திரட்டு பூந்துறையே-ஆகஞ்சேர்
வேதவனத் தாளி றைஞ்சும் வேதவனத் தாளிறைஞ்சும்
வேதனவனத் தாளிறைஞ்சும் வீடு.

## வெள்ளோடு

வெள்ளோடையாம் பனிறை விண்டய னோடண்டர் தொழும்
வெள்ளோடையாம் டனிறை வெள்ளோடே-வெள்ளோடை
ஏற்று விட்டங் கையனார் ஏற்று விட்டால் கயரும்
ஏற்று விட்டங் கையனாரில்.

## நசையனூர்

செறிவார் வினை வயலில் தெண்ணீர்க் கமலப்
பொறிவாழ் நசையாபுரியே—நெறிவானோர்
ஓங்குவர் மூவேந்தர த்தர் ஓங்குவர் மூவேந்தரத்தர்
ஓங்குவர் மூவேந்தர் ஊர்.

## எழுமாத்தூர்

தாழைவனம் பூகவனம் சந்தனப்பூங் காவனமும்
வாழைவனஞ் சூழ்எழு மாத்தூரே—தாழை
நகர்மே யடைத்த நகர்மே யடைத்த
நகர்மே யடைத்த நகர்.

## தக்கராமயணம்

வந்ததென் குரங்கு ஒன்றில்லை யழித்த தேன்கடைவாய்மந்தீ
சிந்தையின் களிப்பால் யானார் தெரியு மாதெரியாதாயின்
இந்தமா நகருளோருக் கிறைவனோ தெரியுமாவன்
விந்தை மாநகரோர் போற்றும் விபீஷண னென்னும் வேந்தன்.

### பூந்துறை வெண்பா

கள்ளி எடுத்த கொக்கி கையில் எடுத்துவர
வெள்ளி யிருசாம முற்றவேளை தனில்—தெள்ளுகதிர்
காட்டக்கு மாரசெய காங்கயமன் றாடியென்மேல்
நாட்டமற ஓட்டமிட்டேன் நான்.

### தனிக்கவி

மந்திர மனையதுண்டோ சோழன் மணிமுடிவளவன் சேரன்
சுந்தர பாண்டியன்றன் றொகுமணி மகுடஞ் சூட்ட
அந்தணர் குலங்க ளெல்லாம் அறங்களும் விளங்கவேண்டி
இந்திர னோலக்கம் போலிருந்தது பெரியநாடே.
ஈழமண்டல முதலென வுலகத் தென்று மண்டலந் தெரியடை வேந்தர்
தாழுமண்டலஞ் செப்பிய வளவன் சயதரன் பிறந்தரெமயூரித் தலம்
வாழுமண்டலங் களகமும் மணியும் வரம் புகர்வெகும்பிலே கொளிக்கும்
சோழமண்டல மிதற்கிணை யாகவே சொல்லு மண்டல சொல்ல வொண்ணாததோ.
பார்வாழி நான் மறை நூற்பரணியார் கதிவாழி
கார்வாழி வளமைப் பிரான்காவேரி நதிவாழி
சீர்வாழி பெருக்காழாதி திருச்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தொன்பது வளநாடே.

### காங்கய நாட்டுப் பாடல்

அட்ட திசையெங்கணும் அறுநான்கு நாட்
டினிலதி வலிமை பெற்ற நாடு
அரதேசி பரதேசி பசியாற வெந்நாளும்
அன்னம் பகிர்ந்த நாடு
மட்டுலவு குழல் மாதர் நடன சங்கீத
வளம் பெற இருந்த நாடு
மணிமுடி தரித்து மூன்று பட்டத்தரசர்
வந்தரசு செய்யு நாடு
திட்டமுடன் சத்திசிவன் மலைவேலருக்குத்
திருத்தேர் நடத்து நாடு

செம்மையுள பனிரெண்டு கிராம
நாட்டார்களுஞ் செல்வஞ் சிறந்த நாடு
கட்டுமுனை தவிராது வெட்டிச் சயங்கொண்ட
கதுமை பெற்றிட்ட நாடு
கனசென்னிமலை காஞ்சி ஆன்பொரு
நைசூழ்கின்ற காங்கய நாடுதானே.

துய்யபுகழ் நாவலன் வாயெச்சில்
கழுவித் துரைத்தனம் பெற்றநாடு
தோறாத மனதுடைய காறையானூர்தனில்
சொல் வெற்றி கொண்ட நாடு
வைய புலமென்றுமே புலவருக்காக முன்
மன்னுகாரைச் சர்க்கரை
மண்டல மெலாமறிய நெய்தனிற் கையிட்டு
வரிசை பெற்றிட நாடு
செய்யபுகழெல்லையில் பட்டம் ஓரெட்டுத்
தெறிக்கப் பொருத்த நாறி
சீரிய சொல்வாய்மையது கூறியே
திகழ் படைத்திட்ட நாடு
கையர் தன்றாயர் முன்கழு முனையின் மோதியே
கதுமை பெற்றிட நாடு
கன சென்னிமலை காஞ்சி ஆன்
பொருநை சூழ்கின்ற காங்கய நன்னாடுதானே.

மருவுலவு காங்கயந்தனில் வளர்
அகத்தீசர் வள்ளிநகர் மாந்தீசரும்
வன்காடையூரப்பர் பாட்டாலின் நகர் தன்னில்
மருவுபால் வெண்ணெய் நாதர்
பருதிமதி சூழ்கின்ற கீரனூர் ஆதீசர்
பாற்பதிப்பச் சோழரும்
பரஞ்சைநகர் நாட்டூரர் வளர் காறைமாநகர்
பதிசெயங் கொண்ட நாதர்

குருபரவு மருதுறைப் பட்டீசர்
முத்தூர் குலோத்துங்கச் சோழீசரும்
கூர்கண்ணை மாந்தீசர் வெள்ளைக்கல்
சோழீசர் கொங்கேழு லிங்கமு மிக
கருணைபுரி ரட்சிக்க வளநாடு காக்கின்ற
கமலபதி யுதவு நாடு
கனசென்னிமலை காஞ்சி ஆன்பொருநை
சூழ்கின்ற காங்கய நன்னாடுதானே,

உ. வே. சா.

குறிப்பில் மேலும் பல பாடல்கள் உள்ளன.

ஆர்வ முள்ளோர் திருவான்மியூர் சென்று பெற்றிடுக.

---

## அறிக்கை (படிவம் 4)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம்: | 11-B, இரண்டாவது அவின்யு, இந்திரா நகர், சென்னை-600020. |
| 2. | பருவம் : | காலாண்டிதழ் |
| 3. | அச்சிடுபவர் : | நாரா. நாச்சியப்பன், இந்தியர், 202, ஜானிஜானிகான் ரோடு சென்னை-600014. |
| 4, 5, 6, | வெளியிடுபவர், ஆசிரியர் & உரிமையாளர் | ச. பிரகதம் 11-B, இரண்டாவது அவின்யு இந்திரா நகர், சென்னை-600020. |

நானறிந்து நம்புகிறபடி, மேற்கண்டவை அனைத்தும் உண்மை என, ச. பிரகதம் ஆகிய நான் அறிவிக்கிறேன்.

ஒப்பம்: ச. பிரகதம்

# அடையாறு தமிழ்ச் சங்கம்

புதிவு எண் 80/80

**தொடக்கம் :** 1980 செப்டம்பர் 2.

**நோக்கங்கள் :**

அ. இலக்கியம், கலை, பண்பாடு, தமிழ் மொழி வளர்ச்சி.

ஆ. சமூக மேம்பாடு

இ. இளைஞர்களின் ஆளுமை வளர்ச்சி.

**பதிவு அலுவகம் :**

48, முதல் அவின்யு,

இந்திரா நகர், சென்னை-600 020.

**கட்டணம் :**

ஆண்டுக்கு 20 ரூபாய்

ஆயுளுக்கும் 200 ரூபாய்தான்.

தலைவர் : பொ. சோமசுந்தரம் B.A.,
48, முதல் அவின்யு, இந்திரா நகர்,
சென்னை -20.

செயலாளர் : Er. கொடுமுடி ச. சண்முகன், BE, DSS., MIE,
11-B, இரண்டாம் அவின்யு, இந்திரா நகர்,
சென்னை-20.

பொருளாளர்: ம. செ. இரபிசிங் M.A.
8-A, இரண்டாம் அவின்யு, இந்திரா நகர்,
சென்னை-20.

# அடையாறு தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள்

## முதல் அமைப்புக் கூட்டம் : 2-9-1979

| வ.எண். | நாள் | நிகழ்ச்சி | வருகை | உரைப்பொருள் |
| --- | --- | --- | --- | --- |
| 1 | 14-10-1979 | தொடக்க விழா | பொ. சோமசுந்தரம் | தலைமையுரை |
| | | | அமைச்சர் கே. இராசாமுகமது | தொடக்கவுரை |
| | | | டாக்டர். அவ்வை நடராசன் | சிறப்புரை |
| | | | பேராசிரியை தி. அம்சத்வனி | ,, |
| 2. | 11-11-1979 | கூட்டம் | சோ. இராசகுரு | தலைமையுரை |
| | | | சிலம்பொலி. செல்லப்பனார் | சிலப்பதிகாரம் |
| 3. | 9-12-1979 | கூட்டம் | ப. கோபாலகிருட்ணன் | தலைமையுரை |
| | | | டாக்டர். கணேச. கோபாலகிருட்டிணன் | தமிழர்தம் கருகிய அறிவியல் நோக்கு |
| | | | எழுத்தாளர் சு. சமுத்திரம் | தனது அனுபவம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 13-1-1980 | கூட்டம் | பொறியாளர். துரைராசு | தலைமையுரை |
| | | | டாக்டர். க. த. திருநாவுக்கரசு | மனிதன் |
| 5. | 17-1-1980 | காணும் பொங்கல் | அனைவரும் | கலந்துரையாடல் |
| 6. | 10-2-1980 | கூட்டம் | எழுத்தாளர் சோ. சிவபாதசுந்தரம் | தலைமையுரை |
| | | | எழுத்தாளர் த. நா. குமாரசாமி | தாகூர் |
| | | | வ. உ. சி. ஆ. இளங்கோ | இலக்கிய வட்டத் தொட்டிகள் |
| 7. | 9-3-1980 | கூட்டம் | பொறியாளர் கோ. திருஞானசம்பந்தம் | தலைமையுரை |
| | | | பேராசிரியை. இராசலட்சுமி இராமச்சந்திரன் | சமயமும்-தமிழும் |
| | | | பேராசிரியர். இரகுராம் சிங் | கல்வி - பயிலுநரும் பயிற்றுதலும் |
| 8. | 13-4-1980 | புத்தாண்டு விழா | சோ. இலட்சுமிரதன் பாரதி | தலைமையுரை |
| | | | மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரம்பிள்ளை | வாழ்த்துரை |
| | | | எழுந்தாளர் அகிலன் | தனது அனுபவம் |
| | | | திருமதி வாசந்தி சங்கரநாராயணன் | Dance Forms of Tamilnadu & Kerala |
| | | | பேரா. சரவண ஆறுமுகனார் | An Appreciation of Tamil Poetry |
| 9. | 11-5-1980 | கூட்டம் | டாக்டர். பொன். கோதண்டராமன் | சோழர் கால இலக்கிய நிலை |
| 10. | 8-6-1980 | கூட்டம் | டாக்டர். பே. கோவிந்தராசுலு | நாளமில்லா சுரபிகள் |

# அடையாறு தமிழ்ச் சங்கம்

ஆயுள் உறுப்பினர்கள் : 1. பொ. சோமசுந்தரம்
2. சோ. இராசகுரு
3. பெ. கிருட்டிணமூர்த்தி
4. கொடுமுடி ச. சண்முகன்
5. சு. வேலு
6. சரவண ஆறுமுகனார்
7. பி. கோபாலகிருட்டிணன்.

1980-ம் ஆண்டு உறுப்பினர்கள் :

டாக்டர் க. த. திருநாவுக்கரசு
ம. செ. இரபி சிங்
ப. கருப்பண்ணன்
க. செ. கோவிந்தசாமி
டாக்டர். ஏ. இராசசேகரன்
வி. விசுவநாதன்
டாக்டர். மு. மாணிக்கவாசகம்
ஏ. நடராசன்
ஆ. செயபால்
சொக்கு. சுப்பிரமணியம்
கே. அம்மையப்பன்
டாக்டர். லலிதா காமேசுவரன்
டாக்டர். ச. வே. சுப்பிரமணியம்
சோ. இலக்குமிரதன் பாரதி
ச. ஆவுடையப்பன்
டாக்டர். கே. கே. பிள்ளை
ச. செபராசு
ஆ. சிவாஜி
டாக்டர். இராஜேசுவரி நடராசன்
ம. சொக்கலிங்கம்
கோ. திருஞானசம்பந்தம்
கொண்டல் சு. மகாதேவன்
டாக்டர். ம. ப. சொக்கலிங்கம்
ந. சோமன்

அடையாறு தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராவது உங்கட்குப் பெருமை. நீங்கள் உறுப்பினராவதால் தமிழும் தமிழ்நாடும் பெருமிதமடைகின்றது.

ஆண்டுக் கட்டணம் ரூ 20
ஆயுட் கட்டணம் ரூ 200

தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுப் பயனடைய வருக!
அறிவுக்கு விருந்து ! உள்ளத்திற்கு உவகை !
நாம் சந்தித்துக்கொள்ள இனிய வாய்ப்பு.

கூடி மகிழ வருக

# எளியோரைக் காத்து,
# அவர்களுக்கு உதவுங்கள்

ஹரிஜனங்களும் வேறு எளிய பிரிவினரும்
தாக்கப்படுதல் நமது சமூகத்துக்கு இழுக்காகும்.
இது நமது முன்னேற்றத்தை தடுக்கிறது.



இந்திய மரபை போற்றிப் பேணுவோம்.

## நாம் எல்லோரும் ஓரினம்

All kinds of tyres from Scooter to Tractor tyres are retreaded most scientifically in our Modern Plant

**For Quicker and Dependable Retreading**

*Contact :*

# THE ANAMALLAIS RETREADING CORPORATION

104, MOUNT ROAD—GUINDY

**MADRAS—600 032**

Dial : 433286, 433287, 433288

ஆசிரியர், வெளியிடுபவர் : கொடுமுடி சண்முகப் பிரகதம்,
11-ஆ இரண்டாம் பெருஞ்சாலை, இந்திரா நகர்,
சென்னை-600 020

சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 0